# மிருகத்தின் முத்திரை என்றால் என்ன?



இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

**ஓர் ஆச்சரியமான உண்மை:** போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கான சிப்பாய்களுடன் இதில் யார் நண்பன் யார் எதிரி என்று தெரியாத நிலையில் நின்றுகொண்டிருப்பதாகக் கற்பனை செய்துபாருங்கள். அமெரிக்க உள்நாட்டுப் போரின் துவக்கத்தில், யூனியன் மற்றும் கூட்டாட்சி படைகளுக்கென்று தனிப்பட்ட குறிப்பிட்ட சீருடைகள் இல்லை. இது போர்க்களத்தில் ஒழுங்கற்ற சூழ்நிலையையும் மாபெரும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. வீரர்கள் தங்களுடைய படைவீரர்களையே அவ்வப்போது எதிரிகளென நினைத்து சுட்டுக்கொண்டிருந்தனர். இறுதியில், கப்பற்படை யூனியன் வீரர்களுக்கு நீல நிறம் மற்றும் கூட்டாட்சி வீரர்களுக்கு சாம்பல் நிறம் என்று தனிப்பட்ட சீருடை நிறங்கள் கொடுக்கப்பட்டன.

பூமியின் வரலாற்றின் கடைசி நாட்களில் நடக்கவிருக்கும் மாபெரும் யுத்தத்தைக் குறித்தும், அதில் நீங்கள் எந்தப் பக்கத்தைச் சார்ந்தவர் என்பதைத் தெளிவாக அடையாளப்படுத்தும் முத்திரையைக் குறித்தும் வேதாகமம் கூறுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான இந்தப் போராட்டம் லூசிபர் என்ற வல்லமையான தூதன் தேவனுக்கும் அவருடைய இராஜ்ஜியத்துக்கும் விரோதமாகக் கலகம் செய்தபோதே நெடுங்காலத்திற்கு முன்னதாகவே துவங்கிவிட்டது. “வானத்திலே யுத்தம் உண்டாயிற்று: (வெளி. 12:7), அந்த லூசிபர்தான் “பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பமென்று” (வசனம் 9) அழைக்கப்பட்டதென வேதம் கூறுகிறது.

இறுதியாக, “சாத்தானும், அவனைச் சார்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.” அதுமுதல், அவன் ஒவ்வொரு மனிதனையும் அவனுடைய மிக மோசமானப்

போராட்டத்திற்குள் இழுத்துக்கொண்டிருக்கிறான். இப்பொழுதும் இந்த உலகப் போராட்டத்தின் இறுதிக்கு வந்திருக்கும் நாம் ஒன்றைத் தேர்வு செய்யவேண்டுமென்று வேதம் கூறுகிறது: மிருகத்தின் முத்திரையை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது.

ஆனால், முத்திரை என்றால் என்ன? அந்த மிருகம் யார்? மேலும் இவை அனைத்தும் உங்களுடன் எவ்வாறு தொடர்புடையவைகளாயிருக்கின்றன?

***மிருகத்தின் முத்திரையைக் குறித்து நீங்கள் தெரிந்துவைத்திருக்கவேண்டிய ஐந்து உண்மைகள் இதோ!***

## 1 இந்த மிருகம் ஒரு அரசியல் மற்றும் ஆன்மீக வல்லமையை அடையாளப்படுத்துகிறது.

மிருகமும் அதின் முத்திரையைக் குறித்தும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. வேதத்தின் இந்தப் புத்தகம் எதிர்காலத்தைக் குறித்த மர்மமான அடையாளங்களை தரிசனங்களின் வழியாக வெளிப்படுத்துகிறது.

வேதத்துக்கு நன்றி, ஏனெனில் வேதமே இவ்வடையாளங்களின் அர்த்தங்களை வெளிப்படுத்துகின்றது. வெளிப்படுத்தல் என்ற புத்தகத்துடன் ஒரு நெருக்கமான இணைப்பைக் கொண்டுள்ள தானியேல் புத்தகத்தின்படி, "மிருகங்கள்" என்ற வார்த்தை ராஜ்ஜியங்கள், தேசங்கள், மற்றும் ஆளுகை செய்யும் வல்லமைகளைச் சுட்டிக்காண்பிக்கின்றன (7:17).

வெளிப்படுத்தலில் உள்ள இந்த மிருகம் ஒரு தேசமாகும் (வசனம் 3). இது முழு உலகமும்

தன்னை வணங்கவேண்டுமென்று கட்டளையைப் பிறப்பிக்கும். அதினுடைய அரசியல் மற்றும் ஆன்மீக செல்வாக்கினிமித்தம் வேறுபடுத்திப்பார்க்கப்படுகிறது: "வல்லமையையும், சிங்காசனத்தையும், அதிகாரத்தையும்" உடையதாயிருந்தது (வெளி. 13:2).

இது மற்றுமொரு பெயராலும் அறியப்பட்டுள்ளது: அந்திக்கிறிஸ்து

## 2 மிருகத்தின் முத்திரையானது மிருகத்தின் வல்லமையை அடையாளப்படுத்துகிறது.

இரண்டாம் மிருகமானது, மற்றுமொரு செல்வாக்கு நிறைந்த தேசமாகும். இதைக் குறித்து வெளிப்படுத்தல் பேசுகிறது. இந்த மிருகம் முதலாம் மிருகத்துடன் இணைந்து வேலை செய்யும், "அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்... செய்தது (வெளி. 13:16). வஞ்சகம், பொருளாதார ஒப்புதல்கள் மறுக்கப்படும் அச்சுறுத்தல் மற்றும் மரணம் மூலம் இந்த முத்திரையானது மக்கள்மீது திணிக்கப்படும் (வசனம் 12-17).

மற்றுமொரு முக்கியமான உண்மை இதோ! இவை அனைத்திற்குப் பின் வலுசர்ப்பம், அதாவது சாத்தான் இருக்கிறான் (12:9; 13:4).

## 3 மிருகத்தின் முத்திரையானது தொழுகையையே மையமாகக் கொண்டிருக்கிறது.

இப்பொழுதும் நாம் தேவன் அவருடைய பிரமாணத்திற்கு எவ்வாறு கீழ்ப்படியவேண்டுமென்று அழைக்கிறார் என்று பார்ப்போம்: “நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து...” (உபாகமம் 11:19). இதை விளக்க அவர், “உள்ளங்கையில் அடையாளமாயிருக்கும்படிக்கும்,” அதாவது தேவனை நீங்கள் உங்கள் கைகளினால் செய்யக்கூடிய செயல்கள்மூலமும், உங்கள் எண்ணங்கள் மூலமும், அதாவது நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அவையெல்லாவற்றிலும் அவரைத் தொழுகை செய்யுங்கள்.

வெளி. 13:16 உடனான ஒப்புமைகளை உங்களால் பார்க்க முடிகிறதா? அவ்வாறாகத்தான் மிகச்சரியாக மிருகத்தின் முத்திரையானது வர்ணிக்கப்படுகிறது! எனவே, இந்த முத்திரை என்பது கைகளால் போடப்படுகிற முத்திரையோ அல்லது உடலுக்குள் செலுத்தப்படுகிற முத்திரையோ அல்ல; மேலும் அது பச்சைக் குத்துதலோ அல்லது கம்ப்யூட்டர் சிப்போ கிடையாது. அது ஒரு நபர் தன்னுடைய நம்பிக்கைகள் (நெற்றி) அல்லது செயல்கள் (கைகள்) மூலம் சாத்தானை வணங்குவதற்கானக் கட்டளையை ஏற்றுக்கொண்டார் என்பதை வெளிப்படுத்தும் அடையாளமாகும்.

## 4 தேவனுடைய முத்திரையின் மையக் கருத்தும் தொழுகையாகும்!

தேவனுக்கும் முத்திரை உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா? அது தேவனுடைய முத்திரை என்று

அழைக்கப்படுகிறது. கடைசி யுத்தத்தில் தேவனுடைய முத்திரையானது, "மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்கு பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளைவந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீறூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள் என்று கூறினான்" (வெளி. 14:7), இந்த சத்தியத்திற்கு செவிகொடுக்கும் அனைவருக்கும் தேவனுடைய முத்திரை கொடுக்கப்படும்.

இந்த மொழியானது நேரடியாக பத்து பிரமாணங்களிலிருந்தே வருகிறது. ஏனெனில் இந்தக் கற்பனையே தொழுகை மற்றும் சிருஷ்டிப்பின் முகவரியைக் சுட்டிக்காண்பிக்கிறது (யாத்திராகமம் 20:8-11ஐ வாசிக்கவும்!). இது அவருடைய விசேஷித்த தொழுகை நாளாகிய ஏழாம் நாளையே தேவனுடைய முத்திரையாக அடையாளம் காண்கிறது: "நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன்" (எசேக்கியேல் 20:12). (யாத்திராகமம் 31:17; ஏசாயா 56:1-8ஐயும் படிக்கவும்).

தேவனை நேசித்து, அவரே சிருஷ்டிகர் மற்றும் அவர் ஒருவர் மாத்திரமே தொழுகைக்குப் பாத்திரர் என்று அறிக்கையிடுபவர்கள், "தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைப்" (வெளி. 9:4) பெறுவார்கள். மேலும் அவர்கள் மிருகத்தின் வஞ்சனைகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவார்கள் (மத்தேயு 4:8-10ஐ வாசிக்கவும்).

தேவனுடைய முத்திரை என்பது தொழுகையின் நாளென்றால், மிருகத்தின் முத்திரை என்னவாக இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

## 5 மிருகத்தின் முத்திரையைப் பெறுதல் என்பது ஒரு தேர்வாகும்.

வெளிப்படுத்தல் 14ல் கொடுக்கப்பட்டுள்ள முக்கியமானச் செய்தியானது கடைசி யுத்தத்திற்காக, அதாவது நீங்கள் தேர்வு செய்யும் வாய்ப்புடன் விசேஷமாகக் கொடுக்கப்பட்டதாகும்.

> "அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்கிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும், அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்" (**வெளி. 14:9, 10**).

"யாராவது" என்று வசனம் சொல்கிறது, அப்படியானால் முத்திரையைப் பெறுவதென்பது உங்களுக்குக் கொடுக்கப்பட்டத் தேர்வாகும். சாத்தானை தொழுகை செய்யும்படி நீங்கள் மிருகத்தின் முத்திரையைத் தேர்வு செய்வீர்களா? அல்லது தேவனுடைய கற்பனைகளுக்காக நின்று சிருஷ்டிகரைத் தொழுதுகொள்வீர்களா?

ஒரு பாதை உங்களை அழிவிற்கு வழிநடத்தும்; மற்றொரு பாதையோ இரட்சிப்பிற்கு வழிநடத்தும். இறுதித் தேர்வு உங்களுடையதே!




## இன்னும் அதிகம் தெரிந்துகொள்ளவேண்டுமா?

“மிருகத்தின் முத்திரை’ என்ற வேதபாடத்தில் இந்தக் குழப்பமான முத்திரையைக் குறித்த சத்தியங்கள் முழுவதும் அடங்கியுள்ளன. உங்களுடைய இலவச டிஜிட்டல் பிரதியை Beast20.AFTV.in-ல் பதிவிறக்கம் செய்யவும்.

---

AMAZING FACTS India

**AmazingFactsIndia.org**
Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in